16.03.2026

# கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

## விழுப்புரம்

## அமர்வு வழக்கு எண். 35/2026

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நவநீத கிருஷ்ணன் | | |
| த/பெ | கேசவன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | உதவி ஆய்வாளர், |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 35 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 22/08/2025 ம் தேதி விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில், நான் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நான், தலைமை காவலர்கள் சக்திவேல் மற்றும் சுரேஷ், ஆகியோருடன் சேர்ந்து போதைப்பொருள் மற்றும் மதுவிலக்கு சம்பந்தமாக தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, எம்.ஜி ரோட்டில் உள்ள SMHA டிரேடர்ஸ் என்ற பெயர் கொண்ட மளிகை கடையில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்வதாக எனக்கு ஒரு தகவல் கிடைத்தது. அது சம்பந்தமாக அங்கு சென்று விசாரணையில் ஈடுபட்டபோது, எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரிக்க அவரது பெயர் அசாருதீன் த/பெ.ஹைதர் அலி, பூந்தோட்டம், விழுப்புரம் என்றும், மற்ற விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியதால், அவர் கடையை சோதனை செய்ய, அங்கு 1

) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் இருந்தன. அதை அவர் கடையில் வைத்திருக்க எந்த அரசு அனுமதியும் வைத்திருக்கவில்லை. மேலும் அதை முகர்ந்து பார்க்க அவை அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், குட்கா மற்றும் போதைப்பொருட்கள் என்று தெரியவந்தது. மேலும் அவர் அவற்றை விற்று ஆதாரம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது. அதனால் அவரை காரணம் கூறி அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் மேற்படி தலைமை காவலர்கள் முன்னிலையில், நான் 15 - 10 மணிக்கு கைது செய்தேன். பிறகு அவரை 15 - 15 மணிக்கு விசாரிக்க அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார். அதை நான் பதிவு செய்து, அதில் எதிரி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அந்த மேற்படி பொருட்களை பிடாகத்தை சேர்ந்த ராஜா என்பவருடன் சேர்ந்து பெங்களூரில் இருந்து வரவழைத்து, ராஜா மூலமாக மற்ற கடைகளுக்கு விநியோகம் செய்து வந்ததாகவும், அவ்வாறே மேற்படி பொருட்களையும் தனக்கு கொடுத்ததாகவும், அதை விற்பனை செய்து ஆதாயம் பெற வைத்திருந்ததாகவும், அதில் எதிரி அசாருதீன் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது (எதிரி தரப்பு ஆட்சேபனையுடன்). மேற்படி 1 ) HANS - 2415 பாக்கெட்டுகள், 2) cool lip - 376 பாக்கெட்டுகள், 3) VIMAL PAN MASALA- 1020 பாக்கெட்டுக்குள், 4) V1 - Tobacco - 1020 பாக்கெட்டுகள் ஆகியவற்றை நான் மேற்படி சாட்சிகள் முன்னிலையில், 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அதிலும் மேற்படி சாட்சிகளான தலைமை காவலர்கள் இருவரிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சான்று பொருட்களை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காண்பித்தார். அவைகள் முறையே சா.பொ.1 முதல் சா.பொ.4 வரையிலானவையாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிரி அசாருதீனை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அதன் பிறகு எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் சென்று, பின்பு நான் எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தும், நிலைய குற்ற எண்.176/2025 BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையை முறையாக விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதன் பிரதியை முறையாக உயர் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன். பிறகு எதிரியை உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி, முறையாக திரேக பரிசோதனை செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பிறகு வழக்கு சொத்துக்களை படிவம் - 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு முறையாக அனுப்பி வைத்தேன். அந்தப் படிவம் - 95 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு மேற்சொன்ன சாட்சிகளை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 2 ம் எதிரி ராஜா த/பெ.ரஜினி, நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். விசாரணை முடித்து எதிரிகள் 1) முகமது அசாருதீன், 2) ராஜா த/பெ.ரஜினி (2 ம்எதிரி தலைமறைவு எதிரி ஆவார்) ஆகியோர்கள் மீது BNS.பிரிவுகள் 274, 275, 123 உ/இ 24 (1), 6(b) COTPA ACT -ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அனைத்து ஆவணங்களையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>**1** ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1 ம் எதிரியிடம் ஒப்புதல் வாங்கும் போது, ஒப்புதல் வாக்கு மூலத்தில் 22/05/2025 என்று உள்ளது என்றால் சரிதான். அதேபோல் எதிரி சௌந்தர்ராஜன் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். தட்டச்சுப் பிழை ஏற்பட்டுள்ளது. ரகசிய தகவலாளி எனக்கு நேரடியாக தகவல் கொடுத்தார். ரகசிய தகவலாளி தகவல் கொடுத்தவுடன் அதை பொதுநாட்குறிப்பில் குறிப்பிடுவது வழக்கம் என்றால், சரிதான். அதுபோன்று இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா? என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் பகுதியில் மக்கள் நடமாட்டம் நிறைய உள்ளது என்றும், இருபுறமும் நிறைய கடைகள் உள்ளது என்றும் சொன்னால், சரிதான். நான் இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையாவது விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அப்படி யாரும் முன் வராத பட்சத்தில் அந்த பகுதியை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளரை சாட்சியம் அளிக்க கூப்பிட்டேனா? என்றால், இல்லை. நான் கடை 1 ம் எதிரியுடையது தான் என்பதை காண்பிக்க ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் நிறைய சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த சிசிடிவி கேமராக்களின் புட்டேஜ்கள் எதையும் இந்த

வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அருகாமையில் பள்ளிக்கூடங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால், தவறு. பள்ளிக்கூடங்கள் உள்ளது. அங்கு பள்ளிக்கூடங்கள் எதுவும் இல்லை என்றும் வழக்கிற்காக நான் பொய் கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அப்படி ஏதாவது பள்ளிக்கூடங்கள் இருந்திருந்தால் நான் அதை இந்த வழக்கில் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ம் எதிரியிடம் எந்த இளம் சிறாரும், புகையிலைப் பொருட்களை வாங்கியதாகவோ, அதேபோல் 1ம் எதிரி விற்றதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருட்கள் விஷத்தன்மை உடையவை என்பதை காண்பிக்க தடயவியல் துறைக்கு அனுப்பி அறிக்கை எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ஏற்கனவே வியாபாரம் செய்தது சம்பந்தமாக அவர் மீது புகார் எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 1ம் எதிரியிடம் எந்தவித ஒப்புதல் வாக்கு மூலமும் பெறவில்லை என்றும், மாதாந்திர புள்ளி விவரத்திற்காக வேறு எங்கோ கைப்பற்றப்பட்ட பொருட்களை வைத்து 1ம் எதிரியிடம் கைப்பற்றியதாக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>2</u>**<u>ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1ம் எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் தான், 2ம் எதிரியின் பெயரை முதல் தகவல் அறிக்கையில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிரியை அழைத்து சென்று 2ம் எதிரியின் கிராமத்திற்கோ, இருப்பிடத்திற்கோ சென்று விசாரணை எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் வரையில், 2ம் எதிரியை நான் கைது செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 2ம் எதிரியை நான் அடிப்படை ஆதாரம் எதுவும் இல்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை:</u>

<u>இல்லை.</u>